

# குழந்தை பருவம் மற்றும் கல்வி

## உங்கள் குழந்தைக்கு சிறந்த ஆதரவை வழங்குதல்

நீங்கள் இப்போதுதான் ஜெனீவாவிற்கு வந்து சேர்ந்தீர்களா மற்றும் நீங்கள் ஹாஸ்பிஸ் ஜெனரலின் பயனாளியா? பெற்றோராக உங்கள் பங்கைப் பற்றியோ அல்லது உங்கள் பிள்ளைக்கான செயல்பாடுகள் பற்றியோ உங்களிடம் கேள்விகள் உள்ளதா?
பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை இந்த ஆவணம் உங்களுக்கு வழங்குகிறது.

1. ஜெனிவாவில் பிரசவம்: உங்கள் குழந்தையின் வருகைக்கு எவ்வாறு தயாராக இருப்பது
2. குழந்தையின் முதல் ஆண்டுகள்: பள்ளிக்கு முந்தைய கட்டத்திற்கு எந்த பெற்றோர் குழுக்கள் மற்றும் குழந்தை குழுக்கள் உள்ளன?
3. பள்ளியில் ஒரு குழந்தை இருந்தால்: பள்ளியில் என்ன ஆதரவு கட்டமைப்புகள் உள்ளன?
4. பெற்றோராக இருத்தல்: உங்கள் பிள்ளையின் கல்வி பற்றிய முக்கியமான தகவல்களைக் கண்டறியவும்
5. பொழுதுபோக்கு/செயல்பாடுகள்: உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்யலாம்?
6. சுவிட்சர்லாந்தில் சட்ட கட்டமைப்பு என்ன?

SCAN ME

## 1. ஜெனிவாவில் பிரசவம்: உங்கள் குழந்தையின் வருகைக்கு எவ்வாறு தயாராக இருப்பது

நீங்கள் இப்போது தான் ஜெனிவாவிற்கு வந்திருக்கிறீர்கள், நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள்:
உங்கள் கர்ப்பம் சீராக சம்பவிக்கிறதா என்பதைச் சரிபார்க்க, உங்கள் மகளிர் மருத்துவ நிபுணரால் அவர்களின் தனிப்பட்ட அலுவலகங்கள் அல்லது கிளினிக்குகள் அல்லது ஜெனீவா பல்கலைக்கழக மருத்துவமனையின் (HUG) மகப்பேறு பிரிவில் நீங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுவீர்கள்.

**உங்கள் கர்ப்ப காலத்தில் ஒரு ஆதரவு திட்டத்தின் மூலம் பயனடைய, நீங்கள் கீழே குறிப்பிடப்பட்ட பணியரங்கை தொடர்பு கொள்ளலாம்:**

- ஜெனீவா பல்கலைக்கழக மருத்துவமனையின் மகப்பேறு துறை (HUG): தாய்மார்களுக்கு ஆதரவாக ஒரு மகப்பேற்றுத் தாதியாளருடன் இரண்டு சந்திப்புகள் (பிரெஞ்சு மொழியில்) வழங்கப்படுகின்றன (குழந்தை பிறப்பதற்கு முன் ஒரு சந்திப்பு மற்றும் பின்னர் ஒரு சந்திப்பு).
- "ஜெனீவாவில் கர்ப்பமாக இருப்பது": பிரஞ்சு பேசாத எந்தவொரு கர்ப்பிணிப் பெண்ணுக்கும் பிறப்புக்கு தயார் செய்தல் குறித்த வகுப்புகள் (தேவைப்பட்டால் உங்கள் சொந்த மொழியில் மொழிபெயர்க்கப் படும்).
- ஆர்கேட் மகப்பேற்று பெண் தாதியாளர்கள்: ஜெனீவாவில் ஆர்கேட் மகப்பேற்று பெண் தாதியாளர்களுக்கான பல கிளைகள் உள்ளன. ஒரு கேள்வி கேட்பதற்கு அல்லது உங்கள் குழந்தையின் எடையை எடுக்க அல்லது உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன் மற்றும்/அல்லது குழந்தை பிறந்த பிறகு, மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெற நீங்கள் அவர்களைச் சந்திக்கலாம். நீங்கள் மகப்பேறு துறையை விட்டு வெளியேறியதும், நீங்களும் உங்கள் குழந்தையும் சுகமாக இருக்கிறீர்களா என்று பார்க்க ஒரு மகப்பேற்றுத் தாதியாளர் உங்களை வீட்டிற்கு வந்து உங்களை சந்திப்பார்.

**உங்கள் குழந்தையின் பிறப்பு குறித்து ஜெனீவா நகரத்தின் பதிவு அலுவலகத்திற்கு எவ்வாறு புகாரளிப்பீர்கள்?**

உங்கள் குழந்தை பிறந்த பிறகு, பதிவு அலுவலகத்திற்கு அதிகாரப்பூர்வமாகப் புகாரளிக்க உங்களுக்கு 3 நாட்கள் உள்ளன. இந்த செயல்முறையை மகப்பேறு துறையில் மேற்கொள்ளலாம் [ஜெனீவா பல்கலைக்கழக மருத்துவமனையின் (HUG) மகப்பேறு துறையின் தரை தளத்தில் உள்ள பதிவு அலுவலகம்].

பதிவு அலுவலகம்: இந்த அலுவலகத்திற்கு ஒரு நபரின் வாழ்நாளில், பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து குறிப்பிடத்தக்க நிகழ்வுகளையும் பதிவு

செய்யும் பணி உள்ளது. இது அடையாள அட்டைகளுக்கான உத்தரவுககளை பதிவு செய்கிறது, குடியிருப்பு அனுமதி மற்றும் முகவரி சான்றிதழ்களை வழங்குகிறது மற்றும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்கள் போன்ற வாழ்க்கை நிகழ்வுகள் தொடர்பான சான்றிதழ்களை தயாரிக்கிறது.

குழந்தை பிறக்கும் போது வழங்கப்படும் உதவித்தொகை: குழந்தை பிறக்கும் போது வழங்கப்படும் உதவித்தொகை (ஒரே கட்டணம்) + இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான உதவித்தொகை (மாதந்தோறும் வழங்கப்படும்) ஹோஸ்பைஸ் ஜெனரல் மூலம் வழங்கப்படுகிறது.

தள்ளுவண்டியை எங்கே பெறுவது: றென்ஃபைல், சென்டர் சோஷியல் புராட்டஸ்டன்ட், எம்மாஸ் ஜெனீவ், ஆர்கேட் மகப்பேற்று பெண் தாதியாளர்கள்.

குறைந்த விலையில் குழந்தைகளுக்கான ஆடைகள் எங்கே கிடைக்கும்: வெஸ்ட்டியைர் சிஎஸ்பி, கரிட்டாஸ் வெட் ஷாப், ஆர்க்கேட் சஜ்-ஃபேம்

## 2. குகுழந்தையின் முதல் ஆண்டுகள்: பள்ளிக்கு முந்தைய கட்டத்தில் குழந்தைகளுக்கு என்னென்ன பெற்றோர் குழுக்கள் மற்றும் குழந்தை குழுக்கள் உள்ளன?

பெற்றோர் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு (பிறப்பு முதல் நான்கு வயது வரை) இலவச குழுக்கள் மாகாணம் முழுவதும் உள்ளன.
இந்தக் குழுக்களில் கலந்துகொள்வது உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கும், சமூகமயமாக்கலுக்கும் மற்றும் ஒருங்கிணைப்புக்கு உதவுவதற்கும் அவசியம். பள்ளியைத் தொடங்குவதற்கு முன்பு உங்கள் குழந்தை பிரெஞ்சு மொழியில் ஓரளவுக்கு தேர்ச்சிப்பெறுவார்.

குழந்தை பராமரிப்பு வழங்கும் இடங்கள் மற்றும் சேவைகள்:
கோசினெல்ஸ்: பல்வேறு ஹோஸ்பைஸ் ஜெனரல் கூட்டாண்மை குடியிருக்கை மையங்களில் குழந்தை பராமரிப்பு வசதிகள் உள்ளன. இந்த வசதிகள் பெற்றோர்கள், தன்னார்வலர்கள் மற்றும் தரமான பராமரிப்பை வழங்கும் நிபுணர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.
நர்சரிகள்: நர்சரிகள் மற்றும் ஆரம்பக் கல்வி கற்கும் மையங்கள் **பதி ாறு வாரங்கள் முதல் நான்கு வயது வரையிலா குழந்தைகளுக்கு வழக்கமா குழந்தைப் பராமரிப்பை வழங்குகின்ற** , இது ஒரு அர்ப்பணிப்புடன் கூடிய இடத்தில், ஆரம்ப ஆண்டுகளில் தொழில் வல்லுநர்கள் பொழுதுபோக்கு மற்றும் கல்விச் செயல்பாடுகளை வழங்குகிறார்கள், மேலும் இவர்கள் குழந்தை வளர்ச்சி மற்றும் சமூகமயமாக்கலை ஊக்குவிப்பதோடு குழந்தைகள் பிரெஞ்சு மொழியைக் கற்க உதவுகிறார்கள். குழந்தை **பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ கலந்து கொள்ளலாம்**. இச்சேவைகளுக்கு பணம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்க.
மழலையர் பள்ளி: மழலையர் பள்ளி என்பது குழந்தைகள் பிறருடன் பழகக் கற்றுக் கொள்ளும் இடமாகும், மேலும் அவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு முதல் நான்கு வயது வரையிலான குழந்தைகளுக்கு ஒன்றாக வாழவும் விளையாடவும் கற்றுக்

கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அவர்கள் ஒரு அரை நாள் அல்லது, இன்னும் குறைவான நேரத்திற்கு அல்லது நாள் முழுவதும் கலந்து கொள்கிறார்கள், ஆனால் அவர்களால் தளத்தில் மதிய உணவு சாப்பிட முடியாது. இச்சேவைகளுக்கு பணம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்க.

குழந்தை கவனிப்பவர்கள்: குழந்தை கவனிப்பவர்கள் நர்சரிக்கு மாற்றாக சேவையை வழங்குகிறார்கள். அதாவது, குழந்தை பிறந்தாது முதல் பன்னிரெண்டு வயது வரை, ஒன்று முதல் ஐந்து குழந்தைகளை, வாரத்தில் ஐந்து நாட்கள், ஒரு நாளைக்கு அதிகபட்சம் பத்து மணி நேரம் வரை பராமரிக்கக்கூடிய குழந்தை கவனிப்பவர்களின் வீட்டில் குழந்தை கவனிக்கப்படுகிறது. இச்சேவைகளுக்கு பணம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்க.

பிறப்பிலிருந்து ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு சமூகம் பழகக் கற்றுக்கொள்வதற்கு பல்வேறு சங்கங்கள் பெற்றோர் மற்றும் குழந்தை குழுக்களுக்கு உதவுகின்றன. "*Lieux d'accueil, de socialization et d'intégration pour parents et enfants en âge pré-scolaire (0 à 4 ans)*" என்ற சிற்றேட்டில் இந்த பல்வேறு இடங்களின் முகவரிகளை நீங்கள் காணலாம். பள்ளிக்கு முந்தைய கட்டத்தில் இருக்கும் குழந்தைகள் (பிறப்பிலிருந்து நான்கு வயது வரை) பிறருடன் பழகவும் ஒருங்கிணையவும் கற்றுக்கொள்வது"], BIE ஆல் வெளியிடப்பட்டது. இந்த முகவரிகள் Bonjour Genève இணையதளத்திலும் கிடைக்கின்றன.

கவனமாக இருக்கவும்! உங்கள் குழந்தைப் பராமரிப்புச் செலவுகளுக்கு பணம் பெறுவதற்கு உங்கள் சமூகப் பணியாளரின் ஒப்பந்தம் தேவை.

கல்வி மற்றும் தகவல் திட்டங்கள்:

பெட்டிட்ஸ் பாஸ் இரண்டு வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கு வீட்டில் சந்திப்புகளை ஏற்பாடு செய்யலாம். குழந்தையைத் தூண்டுவதும், குழந்தையின் கல்வி கற்பதற்கு உதவுவதுமே இதன் நோக்கம். இந்த சேவை இலவசம் மற்றும் அதிகபட்சம் பதினெட்டு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

Action Préventive en Milieu Familial (APMF): ஒரு குழந்தையுடன் சிரமங்கள் இருக்கும் பட்சத்தில், APMF வீட்டிற்கு வருகை வழங்கி கல்வி கற்பதில் உதவி செய்கிறது. இச்சேவை இலவசம்.

Bientot à l'école: *Bureau de l'intégration des étrangers* (BIE), முனிசிபாலிட்டிகள், Hospice général மற்றும் Département de l'Instruction Publique ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் வல்லுநர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான அறிமுக அமர்வுகள், பெற்றோரை பள்ளிக்கு அறிமுகப்படுத்தவும், குழந்தைகளை பள்ளி தொடங்கும் போது தயார்படுத்துவதற்காக. பெரியவர்கள் மற்றும் பாலர் பராமரிப்பிற்கான சந்திப்பு பகுதிகள் வழங்கப்படுகின்றன. இச் சேவை இலவசம்.

## 3. பள்ளியில் ஒரு குழந்தை இருந்தால்: பள்ளியில் என்ன ஆதரவு கட்டமைப்புகள் உள்ளன?

உங்கள் குழந்தை ஏற்கனவே பள்ளியில் இருந்தால், பயனுள்ள சில தகவல்கள் இங்கே உள்ளன:

ஜெனீவாவில், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை GIAP (Groupement Intercommunal pour l'Animation Parascolaire) மதிய உணவு நேரங்களிலும் பள்ளிக்குப் பிறகும் மாலை 4மணி முதல் இரவு 8மணி வரை கவனித்துக் கொள்ளலாம்.

கவனமாக இருக்கவும்! GIAP செலவுகளுக்காக பணத்தைப் பெறுவதற்கு உங்கள் சமூக சேவையாளரின் ஒப்பந்தம் உங்களுக்குத் தேவை.

உங்கள் சொந்த மொழியில் மற்றும் கலாச்சாரத்தில் உள்ள பாடங்கள்: உங்கள் பிள்ளை தனது தாய்மொழியில் தொடர்ந்து முன்னேறுவதற்கு, பள்ளியே குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியில் பாடங்களை வழங்கும் சங்கங்களின் பட்டியலைப் பள்ளி பெற்றோருக்கு வழங்கும். இந்த சேவைகளுக்கு பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்க. உதவிக்கு ஏற்பாடு செய்யலாம்.

L'école des parents: பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைக் கொண்ட பிரெஞ்சு மொழி பேசாத அனைத்து பெற்றோர்களுக்கும் தகவல் மற்றும் ஆதரவை வழங்கும் இடம். இச்சேவைகளுக்கு பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்க. உதவிக்கு ஏற்பாடு செய்யலாம்.

### வீட்டுப்பாடத்திற்கு உதவி

Croix-Rouge Jeunesse உடன் வேலை செய்யும் தன்னார்வலர்கள் , பெரும்பாலும் செவ்வாய்க் கிழமைகளில், ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான கூட்டாண்மை குடியிருக்கை மையங்களில் வசிக்கும் துணையில்லாத வயது வராதவர்களுக்கு (பள்ளி விடுமுறை நாட்களைத் தவிர) வீட்டுப்பாட உதவி அமர்வுகளை வழங்குகிறார்கள்.

Reliance: Onex, Confignon, Lancy அல்லது Vernier ஆகிய நகராட்சிகளில் பிரத்தியேகமாக வாழும் குழந்தைகளுக்கு கல்வி ஆதரவை வழங்குகிறது.

Villa Yoyo: புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நான்கு முதல் பன்னிரெண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கு வீட்டுப்பாட உதவி.

La Courte Echelle: இந்த திட்டம் ஒரு "நண்பர்" ஏற்பாட்டில், ஒரு வயது வந்தோரையும் குழந்தையையும் தொடர்பு கொள்ள வைக்கிறது.

Ara/Ajeta: கல்வியில் சிரமப் படுகிற மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான தனிப்பட்ட ஆதரவு பாடங்கள். இப் பாடங்கள் இன்னும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களால் வழங்கப்படுகின்றன. இந்த சேவைகளுக்கு பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்க. உதவிக்கு ஏற்பாடு செய்யலாம்.

**கவ□ மாக இருக்கவும்! செலவுகளுக்கா□ பணத்தைப் பெறுவதற்கு உங்கள் சமூக சேவையாளரின் ஒப்பந்தம் உங்களுக்குத் தேவை.**

## 4. பெற்றோராக இருப்பது: உங்கள் பிள்ளையின் கல்வி மற்றும்/அல்லது ஆரோக்கியம் பற்றிய முக்கியமான தகவலைக் கண்டறியுங்கள்.

பெற்றோராக இருப்பது எப்போதும் எளிதானது அல்ல! அதனால்தான் பல நிறுவனங்கள் ஆலோசனை சேவைகள், குறிப்பிட்ட உதவி மற்றும் தனிப்பட்ட ஆதரவை வழங்குகின்றன. தீவிரமான சந்தர்ப்பங்களில், குழந்தை பாதுகாப்பு நடவடிக்கைகள் பெற்றோருடன் பணிபுரியும் போது அல்லது SPMI மூலம் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அமைக்கப்படலாம்.
ஒரு சிக்கலான சூழ்நிலையை எதிர்கொள்ளும் போது தனியாக இருக்க வேண்டாம்! உங்கள் உதவி பணியாளரைத் தொடர்பு கொள்ளுங்கள்!

## 5. பொழுதுபோக்கு/செயல்பாடுகள்: உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்யலாம்?

ஜெனீவாவில் பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு மற்றும் செயல்பாடுகளை வழங்கும் பல இடங்கள் உள்ளன, அவற்றில் பல இலவசம்.
சேவைகளுக்கு பணம் செலுத்த வேண்டியிருக்கும் போது, ஹாஸ்பிஸ் ஜெனரல் குறிப்பாக கூடுதல் கொடுப்பனவுகள் மூலம் ஒரு பங்களிப்பைச் செய்ய முடியும். உங்கள் உதவி பணியாளரைத் தொடர்பு கொள்ளவும்.

பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள்: விளையாட்டு விளையாடுவது, பொருட்களைத் தயாரித்தல், தையல், ஓவியம் வரைதல், ஒரு மொழியைக் கற்றல், நடனம் மற்றும் பல வாய்ப்புகளை சுறுசுறுப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும், நம்பிக்கையைப் பெறநம் குழந்தைகளுக்கு வழங்குகிறது.

**இங்கே சில பயனுள்ள தொடர்பு விவரங்கள் உள்ள□ :**

புதன்கிழமைகளில் GE DÉCOUVRE: நான்கு முதல் பதினாறு வயது வரையிலான இளைஞர்களுக்கான பல்வேறு வகுப்புகள், புதன்கிழமைகளில் நடைபெறுகிறது.

Loisirsjeunes.ch: குழந்தைகள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்ட விளையாட்டு, கலை, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் குறித்த தகவல்களை பட்டியலிடும் இணையதளம் ஜெனீவா மாகாணத்தில் உள்ள பள்ளி நடைபெறும் காலத்தில் அல்லது பள்ளி விடுமுறை நாட்களில் கிடைக்கப் பெறும்.

சமூக மையங்கள்: ஜெனிவாவில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் சொந்த சமூக மையம் உண்டு. உள்ளூர் பகுதியில் வசிக்கும் குழந்தைகள் மற்றும்

பெரியவர்கள் இருவருக்கும் பல்வேறு நடவடிக்கைகள் அங்கு நடைபெறுகின்றன.

பொழுதுபோக்கு மையங்கள்: குழந்தைகளுக்கான ஏராளமான செயல்பாடுகள், பள்ளி விடுமுறை முகாம்கள் ஆகியவை உள்ளன.

Jardin Robinson: பல்வேறு நகராட்சிகளில் கிடைக்கும், அவை குழந்தைகளுக்கான பல்வேறு செயல்பாடுகளை வழங்குகின்றன.

Païdos/Atelier des Bricolos: புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பல்வேறு நடவடிக்கைகள், நிகழ்வுகள் மற்றும் முகாம்கள்.

Villa Yoyo: புதன், சனிக் கிழமை மற்றும் பள்ளி விடுமுறை நாட்களில் நான்கு முதல் பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச நடவடிக்கைகள்.

அனைத்து இணைப்புகளையும் "Bonjour Genève" இணையதளத்தில் காணலாம்.

## 6. சுவிட்சர்லாந்தில் சட்ட கட்டமைப்பு என்ன?

தனித்து விடப்பட்ட குழந்தைகள்: குழந்தைகளை வீட்டில் தனியாக விட வேண்டாம் என்று கடுமையாக அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வது: பாதுகாப்பு காரணங்களுக்காக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வார்கள் என்றும், அவர்கள் சரியான நேரத்தில் வருவதை உறுதிசெய்து, நாள் முடிவில் வந்து அவர்களை அழைத்துச் செல்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெளியே செல்வது: பதினாறு வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மாலையில் இரவு 10மணிக்குப் பிறகு பெரியவர்கள் உடன் வராத பட்சத்தில் வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

சுவிட்சர்லாந்தில், வயது வந்தவர்களின் வயது பதினெட்டாம் வயதிலிருந்து ஆரம்பிக்கிறது பெற்றோர்கள் தங்கள் குழந்தைககளுக்கு அவர்கள் வயதுக்கு வரும் வரை சட்டப்பூர்வமாக பொறுப்பு. பாலியல் சம்மதத்தின் வயது 16ஆகும்.

கட்டாயத் திருமணம்: **சுவிஸ் குற்றவியல் சட்டநெறியா� து கட்டாயத் திருமணம் அல்லது கட்டாயத் திருமணத்திற்கு முயற்சிகள் எடுப்பது அல்லது கூட்டாண்மைக்கு முயற்சிகள் எடுப்பது ஆகியவற்றைத் தடைசெய்கிறது**,, இது காவலில் வைக்கப்படும் படியான தண்டனை மற்றும் கடுமையான அபராதம் ஆகியவற்றை விளைவிக்கலாம்.

வெட்டுதல்: சுவிட்சர்லாந்தில் வெட்டுதல் மற்றும் பெண்ணின் பிறப்புறுப்பைச் சிதைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் இச்செயல்களின் காரணத்தால் சிறைத்தண்டனை மற்றும் கடுமையான அபராதம் விதிக்கப்படலாம்.

வன்முறை: வன்முறையைத் தடுப்பது சுவிட்சர்லாந்தின் சமூகக் கொள்கையின் ஒரு முக்கியப் பகுதியாகும், மேலும் வன்முறை அல்லது நாசகார செயல்கள் அனைத்தும் குற்றவாளி வயது வராதவராக இருந்தாலும் கூட, தண்டிக்கப்படும்.

16வயதிற்குட்பட்டவர்களுக்கு மது மற்றும் புகையிலை உட்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் போதைப்பொருள்பயன்பாடு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.